சுற்றுநிருபம் : **08/2008**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்
26.06.2008

வட மாகாணத்திலுள்ள சகல
கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்

கூட்டுறவு ஊழியர் நடைமுறைவிதிக் கோவையில் அத்தியாயம் 04 பிரிவு 4:4 இன் உட்பிரிவுகள் 4:4:2, 4:4:3 திருத்தம் செய்தல்

மேற்போந்த விடயம் சம்பந்தமாக 1996ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ம் திகதிய வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் நடைமுறைவிதிக் கோவை, அதனைத்தொடர்ந்து கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் திருத்தம் செய்து வெளியிடப்பட்ட 31.12.2001ம் திகதிய 54/2001ம் இலக்க சுற்றுநிருபத்தின்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

மேற்போந்த சுற்றறிக்கையின் 4:4:2, 4:4:3 உட்பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றிற்காக 01.06.2008ம் திகதி முதல் செயற்படும் வண்ணம் பின்வரும் உட்பிரிவுகள் பதிலீடு செய்யப்படடுள்ளன.

4:4 செயலாளர் படி

4:4:2 உயர் தரத்திலுள்ள சங்கச் செயலாளர்களுக்கு மாதமொன்றிற்கு ரூபா 1,500/= செலுத்தப்படல் வேண்டும்.

4:4:3 ஏனைய சங்கங்களின் செயலாளர்களுக்கு (மேலே 4:4:2ம் பிரிவில் விபரிக்கப்படும் சங்கங்கள் தவிர) மாதமொன்றிற்கு ரூபா 1,000/= செலுத்தப்படல் வேண்டும்.

2008.06.20ந் திகதிய ஆணைக்குழு கட்டளைப்படி.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

P. VAGESHAN
Secretary
Co-operative Employees Commission
Northern Province

பிரதி :

01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
02. வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.
03. வட மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்களுக்கும்